02.03.2026

அ.வ.எண். 99/2022

வா.சா.1 – திரு. திருமலைசாமி, த/பெ. நடராஜ்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 02.03.2026 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய பூமியை தடுத்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த காலைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் க.ச.எண்.703/B5 ஆகும். க.ச.எண். 703/B ன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 3.63 சென்ட் ஆகும். மேற்படி காலையின் அனைத்து ஆவண பரிவர்த்தனைகளும் தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் அருணாச்சலகவுண்டருக்கு அவரது குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் கீழ்புறம் ஏக்கர் 1.81 ½ சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. அருணாச்சலகவுண்டருக்கு, பழனிச்சாமி கவுண்டர் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டரின் மகன் என் தந்தை நடராஜ் என்றால் சரிதான். அருணாச்சல கவுண்டர் பாகப்பிரிவினையில் அடைந்த சொத்துக்களை அவரது மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு 1953 செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். 1965 ம் ஆண்டில் என் தாத்தா பழனிச்சாமி கவுண்டரும், சின்னமுத்து கவுண்டரும் வா.சா.ஆ.1 மூலமாக பரிவர்த்தனை ஏற்படுத்தி கொண்டனர் என்றால் பழனிச்சாமி கவுண்டர், கிருஷ்ணசாமி கவுண்டர், நடராஜ் கவுண்டர் மூவரும் சேர்ந்து பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தி கொண்டனர்.

3. க.ச.எண். 703/B காலையில், ஏக்கர் 1.18 சென்ட் விஸ்தீரணமானது, 1ம் பிரதிவாதியின் தந்தை சின்னமுத்து கவுண்டருக்கு பரிவர்த்தனையில் A-அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஏக்கர் 1.81 ½ சென்ட்டில், பரிவர்த்தனையில் சின்னமுத்து கவுண்டருக்கு, ஏக்கர் 1.18 சென்ட் ஏ-அட்டவணை

சொத்து ஒதுக்கியது போக போக, மீதம் 63 ½ செண்ட் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக என் தாத்தா மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் என் தகப்பனாருக்கு 63 ½ சென்ட்டானது சி-அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். க.ச.எண்.703/ B காலையில் 63 ½ சென்ட்டை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான்.

4. பிரதிவாதிகளின் எதிர் வழக்குரை விவரங்களை தெரிந்துகொண்டேன் என்றால் ஆமாம். எங்கள் ஊரில் பழனிச்சாமி கவுண்டர் மகன் நடராஜ் என்ற ஒரே நபர் உள்ளார் என்றும், அவர் என் தந்தை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் எனக்கு தெரிந்த வரை வேறு நபர் இல்லை என சாட்சியம் அளிக்கிறார். க.ச.எண்.703/ B காலையில் மேல்புறம் ஏக்கர் 1.81 ½ சென்ட்டிற்கு இதர உரிமையாளர்கள் உள்ளனர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமான 15.10.1973 ம் ஆண்டில் என் தந்தை நடராஜ் கவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட 63 1/2 சென்ட் சொத்தையும், அதே காலையில் பாத்தியப்பட்ட மீதமுள்ள ஏக்கர் 1.81 ½ சென்ட் சொத்தின் இதர உரிமையாளர்கள் சேர்ந்து 2 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளனர் என்றால் தவறு.

5. நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கிரயம் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில், எங்களுக்கு பிதுர்ராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டு நாங்கள் அனுபவித்து வருகிற இதன் அடியில் கண்ட சொத்துக்களை நாளது தேதியில் உம்முடைய சுவாதீனத்தில் விட்டும், கிரயத்திற்கு கொடுத்தும், வாங்கிக் கொண்டது ரூ.1,600/- என கண்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தை 15.10.1973 தேதியில் மேற்படி ஆவணம் மூலமாக 2 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த பின்பு க.ச.எண்.703/ B காலையில் 1 சதுரடி நிலம் கூட இல்லை என்றால் சரியல்ல, பூமி உள்ளது, அதன் ஆவணம் உள்ளது.

6. மேற்படி விவரத்தை பிரதிவாதி எதிர் வழக்குரையில்

சொல்லியுள்ள விவரத்தை தெரிந்துகொண்டேன் என்றால் ஆமாம். அதை மறுத்து நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் என் தகப்பனார் இறப்பிற்கு பின்னர் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில், வழக்கு சொத்து பி-அட்டவணை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.703/ B5 காலையில் எங்கள் குடும்பத்திற்குள் வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்ட போது சொத்து எதுவும் இல்லை என்றும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி மேற்படி ஆவணத்தை போலியாக ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.3 ஆவணம், 05.02.2003 தேதியில் ஏற்பட்ட போதிலும், 2004 ம் ஆண்டு 2 ம் பிரதிவாதி பெயரில் என்னிடம் காட்டப்படும் ஆவணம் மூலமாக வழக்கு சொத்திற்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். **26.02.2004 தேதியிட்ட 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய வழக்குரையின் படி தாவா சொத்து எனக்கு மட்டும் பாத்தியம் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பட்டாவில், 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயர் உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.703/ B5 காலையில் மேல்புறம் உள்ள சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது ஆகும். மேற்கண்டவாறு வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு வழக்குரையில் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. எனக்கு பாத்தியப்பட்ட 63 ½ சென்ட் குறித்து உட்பிரிவு செய்ய நான் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். க.ச.எண்.703/B காலையில், க.ச.எண்.703/ B3 காலையானது கிழமேல் தடமாகவும் மற்றும் க.ச.எண்.703/ B4 என்பது தென்வடல் தடமாகவும் இயற்கை அமைப்பில் உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.703/ B3 ல் உள்ள தடமானது 27 சென்ட்டும், க.ச.எண்.703/B4 ல் 32 சென்ட்டும் உள்ளது என்றால் சென்ட் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 அடங்கலில், வழக்கு சொத்து காளியப்ப கவுண்டர் வகையறா பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்குக்கு பின்னிட்டு, வழக்கு சொத்திற்கு என் பெயரில் உள்ள அடங்கல் கணக்கு தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படும் நடப்பு பசளி ஆண்டில், அடங்கல் கணக்கு காளியப்ப கவுண்டர் வகையறா பெயரில் உள்ளது என்றால் சரிதான். **09.02.2026 தேதியிட்ட காளியப்ப கவுண்டர் வகையறா பெயரில் உள்ள அடங்கல் கணக்கு பி.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் உடல்நிலை சரியில்லை என்பதற்கு மருத்துவ சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். வழக்கிடை சொத்தை பிரதிவாதி அனுபவம் செய்து வருகின்றனர் என்றும், நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்தை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அவரது மகள்களான 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

10. 3, 4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டது குறித்து கிராம நிர்வாக அலுவலர் சொன்னதன் அடிப்படையில் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்த போது, 3, 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக் கோரி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தெரியவில்லை. மேற்படி காலையில் மேல்புறமாக பிரதிவாதிகளுக்கு சொத்து உள்ளது. கிராம நிர்வாக அலுவலர் மூலம் செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரிந்துகொண்ட நிலையில் அது பற்றி வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். சுல்தான்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது.

11. நான் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அதை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பாக, சொத்து என் தகப்பனாரால் 2 ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி விவரத்தை தெரிந்திருந்தும், தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் முழு விஸ்தீரணமும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது

என்றும், நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளுடன் வழகடு தாக்கல் செய்துள்ளேன் என்றும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

| |
|---|
| Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct<br><br>Sd./M.Santhosham<br>District Munsif, Sulur |